# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 92/2024

### அ.சா. 13 (LW 19)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.வேலுமணி** | **தொழில்** | **சார்பு ஆய்வாளர்** |
| **த/ பெயர்** | ஆண்டியப்பன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **03.06.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சாணார்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2022 அன்று காலை 10.00மணிக்கு வேடசந்தூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பிலிருந்த போது வேடசந்தூர் தாலுகா, மாரம்பாடி கிராமம், பெரியகுளத்துப்பட்டி, இருப்பு– மல்வார்பட்டி கிராமம், ஒத்தையூரை சேர்ந்த ஆரோக்கியசாமி மனைவி குழந்தை தெரஸ் என்பவர் காவல்நிலையம் ஆஜராகி எழுத்து பூர்வமாக கொடுத்த புகார் மனுவைப் பெற்று வேடசந்தூர் காவல்நிலைய குற்ற எண். 180/2022 இதச பிரிவுகள் 302,109 இதச வாக வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் தான் கைப்பட எழுதி என்னிடம் கொடுத்தார். அந்த புகார் தான் என்னிடம் காட்டப்படுவது ஆகும். வாதி என்னிடம் கொடுத்த புகார் இதுதான். அது **அ.த.சா.ஆ. 10** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையையும் வாதியின் புகாரையும் இணைத்து வேடசந்தூர் கனம் குற்றவியல் நடுவர் அவர்களுக்கு துரித தபாலாக வேடசந்தூர் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி என்பவர் மூலம் கொடுத்து அனுப்பினேன். மற்ற நகல்களை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்க அறிவுரை வழங்கினேன். அதன் பின்பு புலன்விசாரணைக்காக முதல் தகவல் அறிக்கையை காவல் ஆய்வாளர் வேடசந்தூர் பொறுப்பு வடமதுர அனைத்து மகளிர்காவல்நிலைய ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வேடசந்தூர் காவல்நிலையத்திலிருந்து வேடசந்தூர் நீதிமன்றத்திற்கு நடந்து சென்றால் கூட 5 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 7 மணி நேரம் காலதாமதமாக நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டதற்கு ஆய்வாளர் விசாரணையில் காரணம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகாரிலுள்ள எழுத்துக்களும் அ.சா.1ன் கையெழுத்துக்கும் வேறுபாடு உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. அ.சா.1 என்னிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட புகாரில் அ.சா.1.யிடம் கையெழுத்து மட்டும் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.03 18:04:48 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.